[1975 நவம்பர் 5

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வாக்காளர் பட்டியலைத் திருத்தும் பணி முடியும் வரையிலும், மறு உத்திரவு பிறப்பிக்கப் படும் வரையிலும், தற்போது உள்ள நிர்வாக அமைப்பில் எந்தவித மாற்றமும் செய்யக்கூடாது என அரசு உத்திரவிட்டிருப்பதால் திருநெல்வேலி உட்பட ஏனைய பெரிய மாவட்டங்களைப் பிரிப்பதற்கான காலவரம்பை உடனடியாக நிர்ணயிக்க இயலாது.

திரு. எம். முத்தையா: திருநெல்வேலி மாவட்டம் பெரிய மாவட்டமாக இருக்கிறது. இப்போதே தூத்துக்குடியில் ஐ.ஏ.எஸ். டெப்டி கலெக்டர் இருக்கிறார். இதை இரண்டாகப் பிரித்தால் நிர்வாக வசதி அதிகப்படும் என்கிற காரணத்தினால் இதை இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

*193 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தை இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கும் செயற்குறிப்பு தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு .செ. மாதவன்: வாக்காளர் பட்டியலைத் திருத்தும் பணி முடியும் வரையிலும், மறு உத்திரவு பிறப்பிக்கப் படும் வரையிலும் தற்போது உள்ள நிர்வாக அமைப்பில் எந்தவித மாற்றமும் செய்யக் கூடாது என அரசு உத்திரவிட்டிருப்பதால் தஞ்சை மாவட்டம் உள்பட ஏனைய பெரிய மாவட்டங்களைப் பிரிப்பதற்கான காலவரம்பை உடனடியாக நிர்ணயிக்க இயலாது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, வாக்காளர் பட்டியலைத் திருத்தும் பணியெல்லாம் முடிந்ததற்குப் பின்னாலே தஞ்சை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படும்போது, கீழத் தஞ்சை, மேலத் தஞ்சை என்று பிரிக்கப்படுமானால் மேலத் தஞ்சைக்கு தஞ்சை என்றும் கீழத் தஞ்சைக்கு வேறு பெயரிட எண்ணியிருப்பதாகவும் அப்படியிருக்கும்போது கீழத் தஞ்சைக்கு பூம்புகார் அல்லது திருவாரூர் இவை இரண்டில் ஏதேனும் ஒன்று தலைநகராக இருக்கும் என்று சொல்லப்படுகிறது. இதில் எது தலைநகராக அமையும் என்று சொல்ல முடியுமா?

1975 நவம்பர் 5]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொழுது முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிள்ளை பிறந்த பிறகு அல்லவா பெயர் வைக்க வேண்டும்?.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, வாக்காளர் பட்டியலைத் திருத்தும் பணி நடைபெறுவதால், மாவட்டங்களைப் பிரிப்பதை நிறுத்தி வைப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதிலே கோயம்புத்தூர் மாவட்டமும் சேர்க்கப்பட்டிருக்கிறதா? கோயம்புத்தூர் மாவட்டத்தையும் இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கை பல மாதங்களாக இருக்கிறதே, அது சம்பந்தமாக அரசாங்கதின் முடிவு என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே, தஞ்சாவூர் மாவட்டம் பெரிய மாவட்டமாக இருப்பதால் கொள்ளிடத்தி லிருந்து தஞ்சாவூர் கலெக்டர் ஆஃபீசுக்கு வந்து போவதென்றால் இரண்டு நாளாகிறது. ஆகவே, ஒரு அபிவிருத்தியும் செய்ய சாத்தியப்படாத நிலையிருக்கிறது. ஆகவே, இந்தக் காரணங்களை யெல்லாம் அடிப்படையாக கொண்டு தஞ்சை மாவட்டத்தை விரைவிலே இரண்டாகப் பிரிக்க அரசு முடிவு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதைப்பற்றி இன்னும் பரிசீலிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 194. . . .

THIRU K. T. K. TANGAMANI: This is an important question. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது எதையும் பிரிக்கப் போவதில்லையென்று சொல்லிவிட்டார். மறுபடியும் ஒவ்வொரு மாவட்டம் பற்றியும் கேட்டுக்கொண்டிருந்தால் அதே ஆன்சர் தான் சொல்வார்.

THIRU K. T. K. TANGAMANI: What do they propose to do? So many things have happened. . . .

[1975 நவம்பர் 5

ஒவ்வொரு ஜில்லாவிலும் இந்தமாதிரி பிரிவுகள் நடைபெறுகின்றன. இந்தக் கேள்விக்குப் பதில் சொன்ன அடிப்படையிலே, திருநெல்வேலி, தஞ்சாவூர் என்பது மாத்திரமல்லாமல், மற்ற மாவட்டங்களைப் பற்றியும் சொன்னார்களே. மற்ற மாவட்டங்கள் **சம்பந்தமாக எடுக்கக்கூடிய முடிவுகளையும் ஒத்திவைத்து** விட்டார்களா அல்லது ஏதாவது குறிப்பிட்ட நாளிலே இவைபற்றி **பரிசீலனை செய்ய செயற்குறிப்பு உண்டா?**

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பொதுவாக மாவட்டங்களில் நிர்வாக வசதியை அதிகப்படுத்த வேண்டுமென்பது அரசாங்கம் ஏற்றுக் கொண்ட கொள்கை. அந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்ளும்போது படிப்படியாக, ஒவ்வொரு மாவட்டமாகப் பரிசீலிக்க வேண்டும். இப்பொழுது எந்த மாவட்டத்தைப்பற்றியும் நாம் இறுதி முடிவு எடுக்கவில்லை. இதற்கிடையிலே தேர்தல் வருகிற காரணத்தாலே இப்படி ஒரு நிலையை மேற்கொள்ள வேண்டாமென்று மத்திய அரசினர் கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் கேட்டுக்கொண்டது முற்றிலும் சரியென்று நாம் சொல்ல முடியாது, காரணம் அவர்கள் எப்பொழுது தேர்தல் வரும் என்று நிர்ணயிக்கவில்லை. அதுவரையில் பிரிவினையை நிறுத்தி வைக்கமுடியாது என்பது அரசாங்கத்தினுடைய வாதம். ஆனால், நிர்வாகப் பிரிவை ஏற்படுத்தும்போது செலவு அதிகமாகிறது என்பதால் படிப்படியாகச் செய்ய வேண்டியிருக்கிறது. இன்றுவரை எந்த மாவட்டத்தையும் பிரிப்பதற்காக இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, அண்மையிலே தேர்தல் கமிஷன் 33 நாள் நோட்டீஸில் தேர்தலை நடத்தத் தயாராக இருக்கிறது என்று தேர்தல் கமிஷன் பிரதம அதிகாரி கல்கத்தாவிலே ஒரு பத்திரிகையிலே அறிக்கை விட்டதாகவும் அது சம்பந்தமாக எல்லா வேலைகளும் முடிந்திருக்கின்றன என்றும் தெரிகிறது. அந்த அறிக்கையின் அடிப்படையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் புனராலோசனை செய்ய என்ன கஷ்டம் இருக்கும் என்று தெரிவிப்பார்களா?

1975 நவம்பர் 5]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தேர்தல் எப்பொழுது வரும் என்பது பரபரப்பான செய்தியாக இருக்கிறதேயொழிய தெளிவான செய்தியாகச் சொல்ல முடியவில்லை. மாண்புமிகு அங்கத்தினர் சொல்வதைப் போல் தேர்தல் கமிஷன் குறிப்புகளும், அரசுக்கு வருகின்ற குறிப்புகளும் தேர்தல் வரும் என்று எச்சரிக்கையாகத்தான் அமைகின்றன. அந்த அடிப்படையிலே பஞ்சாயத்து, நிர்வாகம் ஆகிய அமைப்புகளைப் பிரிக்கக் கூடாது என்ற முடிவை அரசாங்கம் எடுத்தது. தேர்தலை ஒத்திப் போட்டுக் கொண்டு போகிற நிலை ஏற்படுமானால் மறுபரிசிலனை செய்வது நியாயம் என்றுதான் கருதுகிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, வருவாய்த் துறை அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது நெல்லை மாவட்டத்தைப் பிரிப்பதற்கு இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லையென்று சொன்னார்கள். ஆகவே, அம்மாவட்டத்தைப் பிரிக்கின்ற குறிப்பு (புரப்போசல்ஸ்) அரசாங்கத்திடம் இருக்கிறதா? அப்படி இருக்கிறதென்றால், எந்தெந்த வட்டங்களையெல்லாம் சேர்த்து புதிய மாவட்டம் அமைக்கப் போகிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பொதுவாக மாவட்டங்களைப் பிரிக்க வேண்டுமென்ற ஆலோசனையைப் பற்றித்தான் சொன்னேன். நெல்லை மாவட்டம் என்று நெல்லை மட்டுமல்ல, எந்தெந்த பகுதி என்று இப்போதே ஆரம்பிப்பது அதுவே ஒரு பெரிய போராட்டமாக அமைந்து விடும்.

மேட்டுப்பாளையம் தொகுதியில் வீடுகட்டும் திட்டங்கள்

*194 வினா—திரு. மே. சி. தூயமணி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் தொழிலாளர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் வீடு கட்டித்தரும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(இ) ஆமெனில், அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.